BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# பரந்துபட்ட தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தல் ஆகியவற்றில் தனது பணிக்காக ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பு தேசிய விருது வென்றது

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 15, 2021) – இந்த வாரத்தில், பரந்துபட்ட தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தலுக்கான 2021 ஆம் ஆண்டிற்கான விருது கனடாநாட்டு தீயணைப்புத் துறைத்தலைவர்கள் சங்கத்தினால்(CAFC) ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் [Brampton Fire and Emergency Services (BFES)] அமைப்புக்கு வழங்கப்பட்டது. இந்தப் புதிய விருதானது, தொழிலில் முன்னணி வகிப்பவர்களை அங்கீகாரம் செய்து கொண்டாடுகிறது; தீயணைப்பு சேவைத்துறையினரில் கனடா நாட்டின் பரந்துபட்ட தன்மை கொண்ட மக்களுக்கு சேவை செய்வதை எடுத்துக் காட்டுவதை உறுதி செய்யும்விதமாக கொண்டாடப்படுகிறது.

ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பானது, தான் பணியாற்றும் சமூகத்தின் கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்டு மற்றும் புரிந்துகொள்ளும் பணியாளர்கள் கொண்ட ஒரு பணிப்படையை உருவாக்க உதவுகிறது. BFES க்குள் இருக்கும் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதே முக்கிய முன்னுரிமை கொண்ட மற்றும் கவனம் செலுத்தப்பட வேண்டிய விஷயமாகும்; கவுன்சிலினால் அங்கீகரிக்கப்பட்ட தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பிற்கான 2021-2025 காலத்திற்கான தீயணைப்பு மாஸ்டர் பிளானில் இது ஆமோதிப்பு செய்யப்பட்டுள்ளது. கவனம் செலுத்த வேண்டிய இரண்டு முக்கிய பகுதிகளை இந்த திட்டம் அடையாளம் காட்டுகிறது - தற்போதுள்ள பணியாளர்களுக்குள் இது பற்றிய போதித்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் புதுமை படைக்கும் ரீதியில் ஆட்சேர்ப்பு தந்திரங்களை செயல்படுத்துதல் மற்றும் பலதரப்பட்ட, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமத்துவமான தீயணைப்பு சேவையை உருவாக்குவதற்கான சமுதாய ஈடுபாட்டை உண்டாக்குதல் ஆகியவற்றின் அவசியத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

தீயணைப்புத் துறைத்தலைவர் பில் போயெஸ் எடுத்துக்கொண்ட சவாலில், மற்றும் மண்டலத் தலைவர் ரவ்ஜோத் சட்வால் தலைமையில், BFES துறைக்குள் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ஒரு மூலோபாய செயல் திட்டத்தை கீழ்கண்ட வழிகளில் செய்ய உருவாக்கியது:

- சமூக பங்குதாரர்கள், சமூக அமைப்புகள், இலாப நோக்கமற்ற அமைப்புக்கள், கலாச்சார மற்றும் நம்பிக்கை சார்ந்த பல அமைப்புகளுடன் ஆலோசனை செய்தல்,

- தொடர் பயிற்சி வாய்ப்புகள் மூலம் BFES குழுவிற்குள் கலாச்சார விழிப்புணர்வு மற்றும் புரிதலை அதிகரித்தல், மற்றும்
- பாரம்பரிய தடைகளை உடைத்து, வேலைவாய்ப்பை அதிகரித்தல் மற்றும், ப்ராம்ப்ட்டன் நகரை பிரதிபலிக்கும் வகையில்  முக்கிய சமூகங்கள் அனைத்தையும் இணைப்பதன் மூலம் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தலை ஆதரிக்கும் ஒரு ஆட்சேர்ப்பு மூலோபாயத்தை உருவாக்குதல்

ப்ராம்ப்ட்டன் பலகலவை கொண்ட ஒரு நகரம், மற்றும் பலதரப்பட்ட சமூகம் கொண்டது மற்றும் போற்றப்படுகிறது மற்றும் கொண்டாடப்படுகிறது. நீண்ட கால இலக்குகளும் மற்றும் BFES இப்போது செய்து கொண்டு இருக்கும் வேலையில் முன்னேறுவதும், சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை தொடர்ந்து ஆதரிக்கும் அதே சமயத்தில் தான் பணியாற்றும் சமூகத்தை பிரதிபலிக்கும் வகையில் எதிர்கால பணியாளர்களுக்கு அடித்தளத்தை அமைக்கவும் உதவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தல் ஆகியவற்றில் தொடர்ந்து முன்னேற்றம் காணும் முழு அர்ப்பணிப்புக்காக ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பு குழுவுக்கு வாழ்த்துக்கள். ப்ராம்ப்ட்டன் பல கலவை கொண்ட ஒரு நகரம், மேலும் அனைத்து குழுக்களுடனும் மிகவும் திறம்பட ஈடுபடுவதன் மூலமும் தொடர்புகொள்வதன் மூலமும் நாம் அதன் பன்முகத்தன்மையைக் கொண்டாடுவது மற்றும் அனைவரையும் உள்சேர்த்து போற்றி வளர்ப்பது முக்கியமாகும். ப்ராம்ப்ட்டன் நகர  சமூகத்துடன் இணைவதற்கும் நீண்ட கால வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்களை நிலை நாட்டுதற்கும் BFES ஆல் மேற்கொள்ளப்பட்ட பணிகளால் நான் பெருமைப்படுகிறேன்.

- *பேட்ரிக்  ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பு, வளர்ச்சிக்காகவும் மற்றும் கற்றுக்கொடுப்பதற்காகவும் அவர்கள் தொடர்ந்து செய்யும் அர்ப்பணிப்பு குறித்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். இந்த விருதுடன் அடையாளம் காணப்பட்டதன் மூலம், BFES அணியானது பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தலுக்கு குரல் கொடுப்பது என்பது, தடம் பதிப்பதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சேவையில் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான இந்த அர்ப்பணிப்பு மற்றும் விழிப்புணர்வு, உறவை வளர்ப்பது மற்றும் கல்வியில் தொடர்ந்து கவனம் செலுத்துவது என்பது, எதிர்காலத்தில் இந்த அணியையும், அது ஆற்றும் தொழில் மற்றும் நமது சமூகத்தையும் வெற்றி பெறச் செய்யும்

- *ரொவீனா சாண்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைமைப் பொறுப்பு சமுதாய சேவைகள் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நமது ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அணியில் காணப்படும் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தலுக்கான அர்ப்பணிப்பு ஆகியவை, அவர்களை தொழில்துறையிலும் நமது சமூகத்திலும் முன்னணியாளராக தனித்து எடுத்துக் காட்டுகிறது. நமது தொழிலில் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்ப்பது ஆகியவற்றை வளர்ப்பதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கையை எடுப்பதன் மூலம் - நாம் புதுமை படைக்கவல்ல, மூலோபாயம் கொண்ட, மற்றும் தான் சேவை செய்யும் சமூகத்தை பிரதிபலிக்கின்ற, ஒரு நிறுவனத்தை இயக்குகிறோம் என்பது நாங்கள் அறிந்தே. நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து நமது நகரத்தையும் தீயணைப்பு சேவைகளையும் முன்னோக்கி நகர்த்தியதற்காக நமது ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் தலைமை குழுவினருக்கு எங்கள் நன்றி உரித்தாகட்டும்.

- *டேவிட் பேர்ரிக், தலமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

”சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்சேர்த்தலுக்கான CAFC இன் முதல் வருடாந்திர விருது பெற்ற ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்புக்கு வாழ்த்துக்கள். இந்த விருதானது சிறந்து விளங்கும் தன்மையைக் கொண்டாடுவது மட்டுமல்ல, அதை நாடு முழுவதும் பகிர்ந்து கொள்வதும் ஆகும். வாசகர்கள் இது பற்றிய ஆய்வையும் மற்றவற்றையும் www.cafc.ca இல் படிக்கலாம். இந்த சிறந்த வேலையைப் பகிர்ந்தமைக்கு நன்றி. ”

- *கனடா நாட்டின் தீயணைப்புத் துறைத்தலைவர்கள் சங்கம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

# Media Release

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca